DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**Case No: CC.No. 118/2022**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : சொர்ணலிங்கம்
Father/ Husband Name : கருப்பையா
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1,2வது எதிரிகள் ஆஜர். 3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் மங்கலத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 15.01.2021ம் தேதி மாட்டுப்பொங்கல் காலை 11.00 மணிக்கு மந்தையில் பொங்கல் வைத்துக் கொண்டிருந்தோம். என்னுடைய மகள் நாராயிணி வீட்டிற்கு போகும் போது அவளுக்கும், எதிரிகளுக்கும் பிரச்சினை. எதிரிகள் கோத்தா, கொம்மா என்று பேசி அடிக்க போயிருக்கிறார்கள், பிறகு என் மகள் வந்துக்கொண்டிருக்கும் போதே அவளுடைய செயினை எதிரிகள் அறுத்திருக்கிறார்கள். அதனால் என் மகள்அழுதுக்கொண்டே வந்து சொல்லிக் கொண்டு இருக்கும் போது எதிரிகள் மந்தைக்கு வந்து என்னை கம்பாலும், கட்டையாலும் மற்றும் கையாலும் அடித்து கோத்தா, கொம்மா, தேவிடியா மகன் என்று சொல்லி அடித்தார்கள். அப்போது ஊர்மக்கள் வந்து விலக்கிவிட்டார்கள். பின்னர் ஆறாவயல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எதிரிகளுக்கும் எங்களுக்கும் இந்த குடும்ப பிரச்சினை தொடர்பாக இந்த நீதிமன்றத்தில் வழக்குகள் நடந்துவருகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. 1வது எதிரி என்னிடம் எந்த பிரச்சினையும் செய்யவில்லை என்றால் ஆமாம், குடும்பபிரச்சினை மட்டும் தான் உள்ளது, 1வது எதிரி என்னை அடிக்கவில்லை. நாராயிணியின் செயினை 1வது எதிரி பறிக்கவில்லை என்றால் சரிதான், 2வது எதிரி தான் பறித்தது. 1வது எதிரி நாங்கள் பொங்கல் வைக்கும் போது கட்டையால் அடிக்கவில்லை என்றால் சரிதான். 1வது எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான், குடும்ப பிரச்சினை மட்டும் உள்ளது. இந்த வழக்கிற்கும் 1வது எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும் 1வது எதிரி மீது தேவையில்லாமல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>2 முதல் 4 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். புகாரை யார் எழுதினார் என்றால் நான் தான் எழுதினேன். அந்த புகாரில் 1வது எதிரி சீனிவாசன் தான் என்னிடம் பிரச்சினை செய்து அடித்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி மற்றும் 2வது எதிரி தற்போது பிரிந்து வாழ்கிறார்களா என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் 2,3,4 எதிரிகளுக்கும் இடையே சொத்து சம்பந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2. அறுத்தாக சொல்லப்படும் செயினை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம், அவர்கள் திரும்ப எங்களிடம் கொடுத்துவிட்டார்கள். அறுந்த செயினின் போட்டோவை போலீசாரிடம் கொடுத்தோமா என்றால் இல்லை, அவர்களே போட்டோ எடுத்துக் கொண்டார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் பெறவில்லை. எதிரிகள் அடித்ததாக சொல்லப்படும் கம்பு, கட்டையை போலீசாரிடம் கொடுத்துள்ளோமா என்றால் ஆமாம். எதிரிகள் வந்து என் மகளிடம் கெட்டவார்த்தைகள் பேசியது மற்றும் அவரை அடித்தது என் மகள் சொல்லி தான் எனக்கு தெரியுமா என்றால் ஆமாம், எனக்கு நேரடியாக தெரியாது.

3. நான் தற்போது 1வது எதிரி என் தம்பி என்பதால் அவருடன் சமாதானம் செய்து விட்டு 2முதல் 4 வரையிலான எதிரிகள் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் 2முதல் 4எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2முதல் 4 வரையிலான எதிரிகள் என்னையும், என் மகளையும் அசிங்கமாக பேசவோ, அடிக்கவோ இல்லை என்றால்

சரியல்ல. உண்மையிலேயே காயம் ஏற்ப்பட்டிருந்தால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பேன் என்றும் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 2முதல் 4 வரையிலான எதிரிகள் பேசியிருந்தாலோ, அடித்திருந்தாலோ புகாரில் யார் அடித்தார், யார் அசிங்கமாக பேசினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றும், நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறாததால் தான் பொதுப்படையாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. 2முதல் 4 வரையிலான எதிரிகள் என்னிடம் சொத்து கோரி உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி வழக்கை திரும்ப பெற வைக்க பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, 2வது எதிரி மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2முதல் 4 வரையிலான எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No:CC.No. 118/2022**

Deposition of witness for Prosecution அ.சா.2

Name : தனலெட்சுமி
Father/ Husband Name : சொர்ணலிங்கம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1,2வது எதிரிகள் ஆஜர். 3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 17.06.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் மங்கலத்தில் குடியிருந்துவருகிறேன். அ.சா.1-எனது கணவர். எதிரிகளை தெரியும். கடந்த 15.01.2021ம் தேதி மாட்டுப்பொங்கல் அன்று காலை 11.00 மணிக்கு 2 முதல் 4 எதிரிகள் வந்து அ.சா.1ஐ அடித்தார்கள். என் மகள் நாராயிணியின் 7 பவுன் டாலர் செயினை 2வது எதிரி பாண்டிமீனாள் அறுத்துவிட்டாள். பின்னர் 2முதல் 4எதிரிகள் தகாத முறையில் பேசி அ.சா.1ஐ கட்டையாலும், இரும்பு கம்பியாலும் அடித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. 1வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

**2 முதல் 4வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1 எனது கணவர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் தெரிவித்ததற்கு முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது

என்றும் 2முதல் 4எதிரிகள் உடான முன்விரோதத்தை கருத்தில் கொண்டு நடக்காத சம்பவத்தை பார்த்தாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 2முதல் 4எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. **பூர்ணிமா.,**B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.